**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>**

அ.வ.எண். 73/2020

பெயர் – சுப்பாராஜ்(PW–1)

நாள் – 09.06.2025

**<u>பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்ட கு.வி.</u>**

1) நான் குடியிருந்து வரும் வீடானது எனது மனைவியின் பெயரில் கிரையம் வாங்கிய இடத்தில் கட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தது எனது மனைவி என்றால் சரிதான். பிராதில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் நாங்கள் சொல்லப்பட்டதன் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. எனது பக்கத்து வீட்டுக்காரர் இராஜேந்திரன் வசித்துக் கொண்டிருக்கும் வீடானது கிரையமூலமாக வாங்கிய சொத்து என்றால் சரிதான். நான் எனது வீட்டை கட்டிமுடித்த பின்னர் காம்பௌண்ட் சுவர் எதுவும் கட்டிக்கொள்ளவில்லை என்றால் சரிதான்.

2) காம்பௌண்ட் சுவருக்கான கட்டிட செலவினை இராஜேந்திரன் தான் செய்தார் என்றால் சரிதான். இருவர் வீட்டாரும் பேசிக்கொண்டதன் பேரில் அந்த சுவர் கட்டப்பட்டது என்றால் பொதுச்சுவராக கட்டச்சொன்னோம். இரு வீட்டாரும் பத்திரங்களை வைத்து அளந்து அந்த சுவரை கட்டினோம் என்றால் நாங்கள் ஊரில் இல்லாத நேரத்தில் அந்த சுவர் கட்டப்பட்டது. அந்த சமயத்தில் நாங்கள் எங்கு சென்றோம் என்றால் எனது மகள் வீடு இருந்த கோயமுத்தூருக்கு சென்றிருந்தோம். எப்போது சென்றோம், எப்போது திரும்பி வந்தோம் என்று குறிப்பாக சொல்லமுடியாது. 3) அந்த காம்பௌண்ட் சுவர் கட்ட எத்தனை வருடம் இருக்கும் என்றால் சுமார் 10 வருடம் இருக்கும். எனது இடத்தை இழுத்து காம்பௌண்ட் சுவர் எழுப்பியது குறித்து போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. காம்பௌண்ட் சுவருக்கு வடக்கு பக்கம் பிரதிவாதியிடம் போட்டு அவர் இடத்தில் தான் காம்பௌண்ட் சுவர் கட்டியிருக்கிறார் என்றால் சரியல்ல. எனது இடத்தில் அவ்வாறு காம்பௌண்ட் சுவர் கட்டியிருந்தால் அந்த சமயத்திலேயே காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்திருப்பேன் என்றால் அந்த சமயத்தில் நான் ஊரில் இல்லாத காரணத்தினால் நான் உடனடியாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

4) நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பினையோ மற்றும் இந்த பிராதையோ சுவர் எழுப்பிய சமயத்தில் நான் கோயமுத்தூர் சென்றிருந்த விவரத்தினை நான் தெரிவித்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தொடருவதற்கு முன்பாக சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில்ஒரு வழக்கு தொடர்ந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ரிட் மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவினை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது வீட்டின் மேற்குப்புறம் உள்ள காலி இடத்தில் கழிவு நீர் வருவது அது பிரதிவாதிக்கு கிரையமாகியுள்ள சொத்தில் விழுகிறது என்றால் இல்லை. கமிஸ்னர் அறிக்கையில் கழிவு நீர் விழுகின்ற இடம் இராஜேந்திரனுக்கு உரிய இடத்தில் விழுகிறதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், அதில் இருந்து நீர் வெளியேறி எனது நிலத்தில் விழுகிறது, இதற்காக உயர் நீதிமன்றத்தில் இரண்டு முறை நாடினோம். அந்த உத்தரவை பிரதிவாதிகள் மீறினர்.

5) ஊராட்சி மன்றத்தில்இருந்து அந்த இடத்திற்கு வந்து உறிஞ்சு குழி போடுவதற்கு நாடினார்கள், அதற்கு நான் மறுத்தேன் என்றால் சரி. பிரதிவாதி அந்த இடத்தில் இப்பொழுதும் உறிஞ்சு குழி போடுவதற்கு தயாராக இருக்கிறார் என்றால் சரிதான், ஆனால் அது எனக்கு பாதகமாக அமைந்துவிடும். அந்த கழிவு நீரானது செப்டிக்டேங் மூலமாக வரும் கழிவு நீர் அல்ல என்றால் செப்படிக்டேங் மற்றும் வெளியில் உள்ள நீர் இரண்டும் கலந்து வருகிறது. அந்த இடத்தில் உறிஞ்சு குழியானது அமைப்பதற்கு போதுமான இடம் அவருக்கு உள்ளதென்றும், வாகனம் வந்து செல்வதற்கு நான் இடம் அளிக்காததால் உறிஞ்சு குழி அமைப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதென்றால் அவருக்கு அங்கு இடம் இல்லை.

6) நான் சொல்வதுபோல் அந்த இடத்தை பிரதிவாதியானவர் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றும், எனது அனுபவத்தை அவர் இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்போ, இடையூரோ நடந்திருந்தால் நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் நீதிமன்ற ஆணையர் அறிக்கை வந்த பின்னர் தான் எனது உரிமை குறித்து நான் தெரிந்து கொண்டேன். பிரதிவாதி அவரது சொந்த செலவில் எழுப்பிய தனிச்சுவரை ஜோர்டனை செய்து பொதுச்சுவர் ஆக்குவதற்காக இந்த வழக்கினை பின்னிட்டு பிரதிவாதிக்குஇடையூறு செய்யும் நோக்கத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, இருவரும்

கேட்டுக்கொண்டதன் பேரில் அது பொதுச்சுவராக எழுப்பப்பட்டது என்றால் சரிதான்.

7) அந்த சுவர் எழுப்பப்படும் போது நான் ஊரில் தான் இருந்தேன் என்றால் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கினை பிரதிவாதியின் செலவுத்தொகையோடு தள்ளுபடி செய்ய தகுந்தது என்றால் சரியல்ல. சுவர் கட்டி 12 வருடங்கள் ஆகியும் இந்த வழக்கு காலதோசத்தினால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல.